[7th February 1959

SRI V. K. KOTHANDARAMAN : திருவள்ளுவர் தமிழ் நாட்டின் பண்பைப்பற்றியும் ஜாதி மத பாகுபாடு கூடாது என்று திருக்குறளில் கூறி பெருமையைத் தந்த அவரின் திருவுருவத்தை இவ்வாறு இருக்கும் என்று இன்னும் என் தீர்மானிக்காமல் இருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : திருவள்ளுவர் உருவம் எவ்வாறு இருக்கும் என்று சர்க்கார் தெரிவிக்கவில்லை. எப்படி இருக்கும் என்பது சர்ச்சையில் இருக்கிறது. ஆனால் பாட புத்தகத்திற்கு வேண்டி கற்பனையில் ஒரு உருவத்தை அமைத்திருக்கிறார்கள்.

Technological Diploma Board Examination

* 104 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that students who have appeared and passed Technological Diploma Board Examination in 1955–56 and 1957–58 have not received their certificates and diplomas till October 1958; and

(*b*) if so, the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Candidates who applied with proper certificates after passing the examination and undergoing one year's practical training have been awarded their diplomas. The eligible candidates who have not got the diplomas so far have either not submitted their applications for diplomas or have sent their applications with defective certificates necessitating further correspondence with them.

SRI K. SATTANATHA KARAYALAR : 1955–56-ம் ஆண்டிலே பாஸ் செய்த மாணவர்களுக்கு இன்னும் டிப்ளோமா சர்டிபிகேட் கொடுக்கப்படவில்லை. சர்டிபிகேட் பாரம் இல்லாத காரணத்தால் காலா காலத்தில் அவைகள் கொடுக்கப்படவில்லையா ? இல்லையென்றால் வேறு எந்தக் காரணத்திற்காக இந்தக் காலதாமதம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்டிபிகேட் கொடுக்காதது, சர்டிபிகேட் பாரம் இல்லாத காரணத்தினால் அல்ல. இந்த பரீட்சையில் பாஸ் செய்த பிறகு ஒரு வருஷம் பிராக்டிகல் கோர்ஸ் எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்குப் பிறகுதான் சர்டிபிகேட் கொடுக்கும்படி ஒரு விண்ணப்பம் போடவேண்டும். சில பேர்கள் பிராக்டிகல், சிலபேர்கள் டிப்ளமோ கோர்ஸ், பிராக்டிகல் கோர்ஸ் ப்ாஸ் செய்தும் கூட சர்ட்டிபிக்கட் கேட்காமல் இருந்துவிட்டார்கள், அவர்களுக்கு கொடுக்கப்பட வில்லை.

Corruption

* 105 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : (on behalf of Sri N. R. Thiagarajan) : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) தற்போதைய சென்னை ராஜ்யம் அமைத்த பின் இன்றுவரை லஞ்ச ஊழல்களுக்காக ஜில்லாவாரியாக வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? அவர்கள் பார்த்த வேலைகள் என்ன ?

(ஆ) சஸ்பெண்ட் செய்து வைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் மீதுள்ள வழக்குகள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*c*) The time and labour involved in collecting and furnishing the statistical data will not be commensurate with the purpose served.